DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -14

| | | |
|---|---|---|
| Name | : திரு. கந்தசாமி | Caste: |
| Father's Name: | திரு. காவேரி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 26th day of July - 2023.

**A1 and A3 to A5 present. A6 absent. He is represented by counsel.**

**26.07.2023.**

**முதல் விசாரணை**

நான் உத்தமசோழபுரத்தில் அரியானூர் நடுத்தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்கிறேன். கஞ்சமலையில் பெருமாள் கோவில் வைத்திருக்கிறேன். இறந்துபோன விஜயனை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.13 காவேரியை தெரியும். அவர் எனது பங்காளி. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அரியானூர் கூட்டுரோட்டில் ஆட்டையாம்பட்டி ரோட்டில் உள்ள ஐயங்கார் பேக்கரியில் நான் தினசரி மாலை நேரத்தில் டீ குடித்துவிட்டு அதன் கிழக்கு புறம்

உள்ள முத்தூட்மினி பைனான்ஸ் முன்பாகவும், அதன் அருகில் உள்ள கடைகளின் முன்பாகவும் நின்று இரவு 7.30 மணி முதல் 9.30 மணி வரை எனது நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு எனது வீட்டிற்கு செல்வது வழக்கம் என்றால் சரியல்ல.

கடந்த 01.09.2014 அன்று நான் வழக்கம் போல் ஐயங்கார் பேக்கரியில் டீ குடித்துவிட்டு இரவு 9.00 மணி சுமாருக்கு உத்தமசோழபுரம் பொரப்பங்காடு காட்டு வளவில் குடியிருக்கும் என் நண்பர் காவேரி என்பவருடன் மேற்படி பேக்கரியின் கிழக்கில் உள்ள பன்றி இறைச்சி கடையின் முன்பாக நின்று பேசிக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது எதிரி சுந்தரமூர்த்தி 4 பேர்களுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு பின்னர் சுந்தரமூர்த்தி அவருடைய TVS XL வண்டியிலும், அவருடன் பேசிக்கொண்டிருந்த 4 பேரும் இரண்டுஇரண்டு பேராக இரண்டு மோட்டார் சைக்கிள்களிலும் சுந்தரமூர்த்தியின் தோட்டத்திற்கு செல்லும் வழியில் சென்றதாகவும், அவர்களுக்கு சற்று முன்பு விஜயன் சென்றதாகவும், அதிலிருந்து சுமார் 1/2 மணி நேரத்திற்கு பின்னர் அதாவது இரவு 9.30 மணி சுமாருக்கு சுந்தரமூர்த்தியுடன் சென்றவர்களில் 3 பேர் ஒரு மோட்டார் சைக்கிளிலும், இரண்டு பேர் மற்றொரு மோட்டார் சைக்கிளிலும் வந்தார்கள் என்றும், அவர்களுக்கு பின்னால் சுந்தரமூர்த்தி அவருடைய வண்டியில் ரோடு வரை வந்து மேற்படி 5 நபர்களையும் அனுப்பிவிட்டு அவரது தோட்டத்திற்கு சென்றுவிட்டார் என்றும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் போலிசார் விசாரணையின் போது உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.</u>

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.